1981 சனவரி 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகளை பட்ஜெட் வருகின்ற நேரத்தில் பேசினால் நலமாக இருக்கும்.

திரு.ஜி.மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஒன்றியங்களில் இரண்டு மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலும் அப்படி ஒரு ஒன்றியத்தில் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதனால் 50 லிட்டர் பெட்ரோல் வழங்குவது எங்களுக்கு போதவில்லை. இதுபோன்ற பகுதிகளிலாவது அதை அதிகரிப்பதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி ஒரு ஒன்றியத்திற்கு 3 சட்டமன்ற உறுப்பினர்கள் வர முடியாது. வேண்டுமானால் ஒரு ஒன்றியத்தில் பாதி பாதியாக இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் கூட இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தான் அந்த ஒன்றியத்தில் வேலை இருக்கக்கூடும். அப்படியே இருந்தாலும்கூட ஒரு நாளைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு, மறுநாளைக்கு வேறு ஒருவருக்கு என்கின்ற முறையில் வேலைகளை வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேமாதிரி நகர்ப்புறத்திலே இருந்து வரக்கூடிய உறுப்பினர்களுக்கும், நகராட்சி மன்ற ஜீப்களை வழங்கி அதுமாதிரி பெட்ரோல் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியம் பற்றிய கேள்வி.

மருந்து ஆய்வாளர் பதவிகள்.

*வினா எண் 94—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்து ஆய்வாளர் பதவிகள் அதிகரிக்கும் ஆலோசனை அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பதவிகள் அதிகரிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது,

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து ஆய்வாளர் பதவிகளை அதிகரிக்கும் யோசனை அரசுக்கு தற்பொழுது இல்லை என்று கூறினார்கள். அப்படியானால் எதிர்காலத்தில் இந்தப் பதவிகளை அதிகரிக்கும் வாய்ப்புகள் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஜாயின்ட் ஸ்டேட் டிரக்ஸ் கண்ட்ரோலர் என்று ஒருவர் இருக்கிறார். இரண்டு ஸ்டேட் டிரக்ஸ் கண்ட்டிரோலர்கள் இருக்கிறார்கள், 59 ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். 10 முதுநிலை (சீனியர்) டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஜாயிண்ட் டிரக்ஸ் கண்ட்ரோலர், டெக்னிகலி குவாலிபைடாக இருக்கிறார். அவர்கள் தாம் எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டு கவனித்துக்கொண்டு வருகிறார்கள். அது மட்டும் அல்ல, இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் அதை விரிவுபடுத்த இருக்கிறோம். இப்பொழுது இருக்கிற ஜாயின்ட் டிரக்ஸ் கண்ட்ரோலர் பதவியை உயர்த்தி, சீப் ஸ்டேட் டிரக்ஸ் கண்ட்ரோலர் என்று ஒருவரைப் போட்டு தனியாக அமைக்க விருக்கிறோம். அது சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்பட்டது. அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கலப்படமான மருந்துகள் இன்றைக்கு ஏராளமாக மார்க்கெட்டிலே வந்திருப்பது மட்டும் அல்லாமல், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கூட இவ்வகை கலப்பட மருந்துகள் ஏராளமாகக் கொண்டு வந்துக் கொடுக்கப்படுவதாக, பத்திரிகைகளிலே அன்றாடம் செய்தி வந்துகொண்டிருக்கின்றன. இந்துப் பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனித்தாரா? அப்படியானால் இவ்வகையான மோசடி மருந்துகளை தடுப்பதற்கு மருந்து ஆய்வாளர்களின் பதவிகளை அதிகப்படுத்துவதற்கு பதிலாக சீப் டிரக்ஸ் கண்ட்ரோலர் என்கிற பெரிய பதவிகளை ஏற்படுத்துவதால் என்ன பயன்? அதனால் இந்த ஆய்வாளர்களின் பதவிகளை அதிகப்படுத்த மறுஆலோசனை செய்ய அரசு முன் வருமா என்று கேட்கவிரும்புகிறேன்?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்து போன்ற பத்திரிகைகளில் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பத்திரிகையில் வருகிற குறிப்புகளை எல்லாம் விளக்கமாகப் படித்துக் கொண்டுதானிருக்கிறேன். அதில் பொதுவாக அகில இந்திய நிலை பற்றித்தான் எழுதியிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பரவாயில்லை என்றுதான் எழுதியிருக்கிறார்கள். அதற்காக நம்மைப் பாராட்டியிருக் கிறார்கள் என்று சொல்லவில்லை. நாம் விதிக்கக்கூடிய ஸ்டான் டேர்ட் ஸ்ட்ரிக்ட் ஸ்டான்டேர்ட்டாக இருக்கிறது. இருப்பினும்

எட்டு பத்து ஆண்டுகளுக்குள்ளாக படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். 1961-ல் 19 என்றிருந்தது ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி இப்போது கிட்டத்தட்ட 60 பேர்கள் கொண்டதொரு அமைப்பாக இருக்கிறது. ஒரு அதிகாரியின் பதவியை உயர்த்துவது என்பது அல்ல. ஹாத்தி கமிட்டி ரிப்போர்ட் அடிப்படையிலும், எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் அடிப்படையிலும் இந்த இலாகாவைப் பிரித்து அது தனியாக இயங்குமானால் அப்படி இயங்குகிற நேரத்தில் போஸ்ட்களை உயர்த்தி அத்திட்டத்தை வகுக்க வாய்ப்பாக இருக்கும். முதல் கட்டமாக இந்த இலாகாவைப் பிரித்து ஒரு தனி டயரக்டர் போட்டு இப்போது டி.பி.எச். தான் தலைவராக இருக்கிறார் புதிய இலாகா வந்தால் உடனடியாகக் கண்காணிக்க வாய்ப்பிருக்கும். இப்போது நன்றாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஆதாரத்தோடு சொல்லத் தயாராயிருக்கிறேன்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: இந்தத் துறைக்கு என்று தனியாக ஒரு தலைவரை நியமிப்பதாகச் சொன்னார்கள். அந்தத் துறைத் தலைவர் ஒரு பார்மஸிஸ்டாக இருப்பாரா அல்லது ஒரு டாக்டராக இருப்பாரா? ஹாத்தி கமிட்டி சொல்லியிருப்பது போல் இத்துறையைச் சார்ந்தவரை நியமிக்கப்போகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இது கொள்கையளவில் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அந்த விஷயம் பற்றி இன்னும் எந்தவிதமான முடிவும் எடுத்துக்கொள்ளவில்லை. அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நானும் எண்ணுகிறேன். அதன் அடிப்படையில் வரக்கூடும். ஆனால் திட்டவட்டமாக இப்போது சொல்வதற்கில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மதுரை மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட மருந்துகள்

*வினா எண். 95—திரு. என். பழனிவேல் திரு. எல். பலராமன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை அரசு மருத்துவமனைக்குச் சொந்தமான மருந்துகள் மதுரை நகரில் சில மருந்துக் கடைகளில் விற்பனைக்கு? வைக்கப்பட்டு இருந்து சோதனையின் போது கண்டுபிடிக்கப் பட்டதா?

(ஆ) எவ்வளவு மதிப்புள்ள மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டன?

(இ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது